

திருப்பூரில் சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்த கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.4.2026) திருப்பூர் மஸ்ஜித் சேவைக் குழு தலைவர் சாகித் அலி, பொதுச் செயலாளர் சுபேர் அகமது மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, இஸ்லாமிய மக்களின் நல்வாழ்விற்காக பல்வேறு நலத்திட்டங்களை கழக அரசு செயல்படுத்தியமைக்காக நன்றி தெரிவித்து, சட்டமன்ற பொதுத்தேர்தலில் கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர். திருப்பூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தினேஷ்குமார் உடன் உள்ளார்.



திருப்பூரில் சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்த கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.4.2026) கொங்கு வணிகர் சங்க மாவட்டச் செயலளார் லாலா கணேசன் மற்றும் நிர்வாகி சக்திவேல் ஆகியோர் சந்தித்து, வணிகர்களின் மேம்பாட்டிற்காக கழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தியதற்காக நன்றி தெரிவித்து, சட்டமன்ற பொதுத்தேர்தலில் கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினை தெரிவித்தனர். திருப்பூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தினேஷ்குமார் உடன் உள்ளார்.

# களத்தில் இளைஞர் அணி

## மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று, வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு:



ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி,
திண்டுக்கல் மேற்கு மாவட்டம்.



சங்ககிரி சட்டமன்றத் தொகுதி,
சேலம் மேற்கு மாவட்டம்.



சீர்காழி சட்டமன்றத் தொகுதி,
மயிலாடுதுறை மாவட்டம்.



நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி,
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.



மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி,
மதுரை வடக்கு மாவட்டம்.



சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி,
சேலம் மத்திய மாவட்டம்.



திருமயம் சட்டமன்றத் தொகுதி,
புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்.



ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதி,
தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.



வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி,
சென்னை தெற்கு மாவட்டம்.



சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்ற தொகுதி அ.மு..மு.க வடசென்னை கிழக்கு மாவட்ட மாணவரணி செயலாளர் சரத்பாபு மற்றும் நால்வர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் அக்கட்சியில் இருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர். இந்நிகழ்வில் சென்னை கிழக்கு மாவட்ட பொருளாளர் இசட் ஆசாத் உடன் இருந்தார்.



பாப்பிரெட்டிபட்டி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் கடத்தூர் வீரகவுண்டனூர், பொம்மிடி, வெங்கடசமுத்திரம் உள்ளிட்ட 20 க்கும் மேற்பட்ட கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் ஒன்றிய செயலாளர் சிவப்பிரகாசம்,இளைஞர் அணி அசோக்குமார்,மதன் பாலாஜி,திராவிடர் கழக ஊமை ஜெயராமன் உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் உள்ளனர்.